செ.வெ.எண்:24/நவம்பர்/2020 நாள்:06.11.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடி ஊராட்சி ஒன்றியத்தில் காலியாக உள்ள பதிவறை எழுத்தர் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---------------------

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, இலால்குடி ஊராட்சி ஒன்றியத்தில் காலியாக உள்ள பதிவறை எழுத்தர் பணியிடத்தினை பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 10.11.2020 அன்று காலை 10.00 மணி முதல் 11.12.2020 அன்று பிற்பகல் 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | : | பதிவறை எழுத்தர் |
| 2. | பணியின் தன்மை | : | அலுவலகத்திற்கு வரும் தபால்களை பகிர்மான பதிவெண் பெற்று இருக்கை எழுத்தர்களுக்கு ஒப்படைத்தல் மற்றும் பதிவறையில் உள்ள கோப்புகள் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல். |
| 3. | சம்பளம் | : | ரூ.15900-50400 என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 4. | வயது | : | 01.07.2020 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். |
| 5. | வகுப்பு | : | அதிகபட்ச வயது வரம்பு (01.07.2020 அன்று உள்ளவாறு) |
| | I.பொதுப்பிரிவு | : | 30 வயதிற்குள் |
| | II.பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் (BC,BCM,MBC/DNC) | : | 32 வயதிற்குள் |
| | III. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை (அனைத்து வகுப்பினர்) | : | 35 வயதிற்குள் |
| | IV.முன்னாள் இராணுவத்தினர் (ஆதிதிரவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு) | : | 53 வயதிற்குள் |
| | V.முன்னாள் இராணுவத்தினர் (ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லாதோர்) | : | 48 வயதிற்குள் |
| | VI.மாற்றுத்திறனாளிகள் | : | வயது உச்சவரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள் |
| 6. | மொத்த பணியிடங்கள் | : | 1 |
| 7. | இட ஒதுக்கீடு விவரங்கள் | : | |

| GT/OC | BC | BCM | MBC/ DNC | SC | SC(A) | ST | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | - | - | - | - | - | - | 1 |

* உள் இட ஒதுக்கீடு விவரங்கள் அறிவிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| 8. | கல்வித்தகுதி | : | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (விதி 5(2)(a)) |
| 9. | விண்ணப்ப படிவம் | : | இப்பணியிடத்திற்கான விண்ணப்ப படிவத்தினை https//tiruchirappalli.nic.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 10. | விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | : | 11.12.2020 அன்று மாலை 05.45 வரை |

**நிபந்தனைகள்:**

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை https//tiruchirappalli.nic.in என்ற இணைய தளத்தில் உள்ள விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.
2. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தை ஆணையர், ஊராட்சி ஒன்றியம், இலால்குடி, திருச்சி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.
3. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் உள்ளவாறு விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
4. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. காலதாமதாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.
6. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.
7. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
8. இனசுழற்சி, வயது மற்றும் கல்வி தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
9. அரசு விதிகளின்படி இனசுழற்சிமுறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஊரக வளர்ச்சி அலகு, இலால்குடி ஊராட்சி ஒன்றியத்தில் பதிவறை எழுத்தர் பணியிடம் காலியாக உள்ளதை இனசுழற்சி அடிப்படையில் நேரடி நியமனம் செய்ய தகுதியுள்ள நபர்களிடமிருந்து 11.12.2020ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் ஆணையர் ஊராட்சி ஒன்றியம், இலால்குடி என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

1. பொதுப்போட்டி முன்னுரிமையற்றவர் (General Turn Non - Priority)

கல்வித்தகுதி:- 10-ஆம் வகுப்பு தேர்ச்சி

| இனம் | SC(A) | SC/ST | MBC/BC | OC |
|---|---|---|---|---|
| வயது | 18-35 | 18-35 | 18-32 | 18-30 |

இனசுழற்சி முறை கடைபிடிக்கப்படும் விண்ணப்பம் வெள்ளைத்தாளில் எழுதி அனுப்பப்பட வேண்டும். அத்துடன் கல்வி தகுதிக்கான மற்றும் முன்னுரிமைக்கான சான்றிதழ் நகலினை சுய சான்றொப்பம் செய்து இணைத்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் இலால்குடி ஊராட்சி ஒன்றிய பகுதிக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ,ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருச்சிராப்பள்ளி.**

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு**
**இலால்குடி ஊராட்சி ஒன்றியம்**
**பதிவறை எழுத்தர் பணியிடத்திற்கான விண்ணப்ப படிவம்**

கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | |
| 2. | ஆண் /பெண் | |
| 3. | தந்தை/கணவர்/பாதுகாவலர் பெயர் | |
| 4. | பிறந்த தேதி/வயது | நாள் / மாதம் / வருடம்<br>-------------------- வயது |
| 5. | கல்வித்தகுதி | |
| 6. | முகவரி | |
| 7. | சொந்த மாவட்டம் | |
| 8. | தொலைபேசி மற்றும் கைப்பேசி எண். | |
| 9. | மதம் | இந்து / கிறிஸ்தவர் / முஸ்லீம் / இதர மதத்தினர் |
| 10. | வகுப்பு / பிரிவு | ஆ.தி/பழங்குடியினர் / பி.வ/மி.பி.வ/ பொது |
| 11. | ஆதரவற்ற விதவை | ஆம் /இல்லை |
| | உடல் ஊனமுற்றோர் | ஆம் /இல்லை |
| | கண்பார்வையற்றவர் | ஆம் / இல்லை |
| | முன்னாள் இராணுவத்தினர் | ஆம் /இல்லை |

- விண்ணப்பத்தில் குறிப்படப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கிறேன்.
- தேர்விற்கு முன்போ அல்லது பிறகோ இவ்விவரங்கள் தவறு என அறியவரும் பட்சத்தில் என்மீது தேர்வுக்குழு எடுக்கும் நடவடிக்கைக்கு உட்படுகிறேன்.
- என்மீது குற்றவியல் வழக்குகள் ஏதும் பதியப்படவில்லை என உறுதியளிக்கிறேன்.

இடம்: விண்ணப்பதாரர் கையொப்பம்
நாள்: